# GVLPS CHITTUR

## ACADEMIC MASTER PLAN

## 2025 - 26



# அகாடமிக் மாஸ்டர் பிளான்

(வகுப்பு 1 முதல் 4 வரை)

முதன்மை கல்வி ஒரு குழந்தையின் கற்றல் பயணத்தின் அடித்தளமாகும். இந்நிலையில், எழுத்தறிவு, உணர்திறன், சிந்தனை திறன், சந்தேகங்களை ஆராயும் அணுகுமுறை, சுயமாக ஆய்வு செய்யும் திறன் போன்றவற்றை வளர்ப்பதே முக்கியக் குறிக்கோள்களாகும்.

இந்த குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்பட்டதுதான் இந்த அகடமிக் மாஸ்டர் பிளான் ஆகும். ஒவ்வொரு வகுப்பு குழந்தைகளின் வயது மற்றும் மனநிலை வளர்ச்சிக்கு ஏற்ப, பல்வேறு பாடங்ககளில் உள்ள செயல்களையும் அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு, குழந்தைமையமான மற்றும் செயல்முறையிலான கற்றலுக்கேற்ப இந்த திட்டம்  அமைக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் முக்கியமாக உள்ளடக்கப்படும் அம்சங்கள்:

* மொழி திறனை வளர்க்கும் வாசிப்பும் எழுத்தும்
* கணிதத்தை மாணவர்களை ஈர்க்கும் பயிற்சிகளும் விளையாட்டுகளும்
* அறிவியல் சிந்தனை, ஆராய்ச்சி மனப்பான்மை ஊக்கமளிக்கும் கற்றல் அனுபவங்கள்
* இலக்கிய, சமூக மற்றும் அறிவியல் பார்வைகளை வளர்க்கும் படைப்பாற்றல் செயல்பாடுகள்

**இதன் மூலம், ஒவ்வொரு மாணவரின் முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த அறிவாற்றல் மற்றும் சமூக வளர்ச்சிக்கு வழிவகுப்பதே இந்த அகடமிக் மாஸ்டர் பிளானின் முக்கிய குறிக்கோளாகும்.**

# CLASS 1

# மொழி

| நோக்கம் | செயல்பாடுகள் | நேரம் | பொறுப்பு | நிதி பகுப்பாய்வு |
|---|---|---|---|---|
| * அனைத்து மாணவர்களும் வாசிக்கவும் எழுதவும் அறிகின்றனர்.<br><br>* எளிய வாசிப்பு அட்டைகள் தயாரித்து வாசித்தல்.<br><br>* சுயமாக நாட்குறிப்பு எழுதுதல். | * வாசிப்பு - பட வாசிப்பு, வாசிப்புக்கூடு தயாரித்தல், வாசிப்பு அட்டை தயாரித்தல்.<br>* எழுதல் மீண்டும் மீண்டும் வரும் எழுத்துக்கள்/சொற்களை கண்டறிந்து எழுதுதல், கற்பனை நாட்குறிப்பு எழுதுதல், கூடுதலான வரிகளை இணைத்தல். | ஜூன் முதல் மார்ச் வரை | வகுப்பு ஆசிரியர்<br><br>SRG<br><br>SMC | PTA |

# ENGLISH

| Aim | Activities | Time | Support | Financial resources- |
|---|---|---|---|---|
| To read, write and speak simple english without mistake | * Reading<br>Rhyming words<br>Find words from Reading materials<br>Read simple sentences<br><br>* Writing<br>Make word web<br>Picture description | June to march | Teachers<br><br>SRG<br><br>SMC | PTA |

# சூழ்நிலை இயல்

| நோக்கம் | செயல்பாடுகள் | நேரம் | பொறுப்பு | நிதி பகுப்பாய்வு |
|---|---|---|---|---|
| *உணவுப்பழக்கங்களை மற்றும் உணவுப்பொருட்களின் தன்மைகளை அறிதல். | * நாட்டுப்புற உணவு கண்காட்சி – சுவை கண்டு பிடித்தல். | ஜூன் முதல் ஆகஸ்ட் வரை | வகுப்பு ஆசிரியர்<br>SRG<br>SMC | PTA |
| * சுற்றுப்புறத்தைப் பற்றியும் பல்வேறு தாவரங்களைப் பற்றியும் அறிதல். | * சமையலறைத் தோட்டம், பூந்தோட்டம் ஏற்படுத்துதல் | செப்டம்பர் முதல் மார்ச் வரை | மதிய உணவுக் குழு | |

# கணிதம்

| நோக்கம் | செயல்பாடுகள் | நேரம் | பொறுப்பு | நிதி பகுப்பாய்வு |
|---|---|---|---|---|
| * 1 முதல் 20 வரையான எண்களை எழுதவும் வாசிக்கவும் அறிதல்.<br><br>* இரண்டு இலக்க எண்களின் பாதி, சமம், அதிகம், குறைவு - விவரித்தல் | * கணிதக் கிட்டுகள் தயாரித்தல்.<br><br>* 1 முதல் 20 வரை எண்களை அடையாளம் காணுதல், ஒற்றை எண்கள், இரட்டை எண்கள், பெரிய எண்,<br><br>* சிறிய எண். கூட்டல், கழித்தல் குறியீடுகளை பிரித்தறிதல். | ஜூன் – ஜூலை<br><br>ஆகஸ்ட் – அக்டோபர்<br><br>நவம்பர் – மார்ச் | வகுப்பு ஆசிரியர்<br><br>**SRG**<br><br>**SMC** | PTA |

# CLASS 2

# தமிழ்

## நோக்கங்கள்

* இரண்டாம் வகுப்பு மாணவர்கள் சூழ்நிலைக்கு ஏற்ப தங்களது சொந்த மொழியில் சிந்தித்து பேசுதல் மற்றும் எழுதும் திறன் பெறுதல்.

* அனைத்து மாணவர்களும் கருத்துக்கள் அறிந்து வாசிக்கும் திறன் பெறுதல்.

* பிழை இன்றியும் சீரானதுமான மொழிநடையுடன் உரை வடிவங்கள் உருவாக்கும் திறனை பெறுதல்.

* ஆண்டின் இறுதியில் மாணவர்கள் சுயமாக கட்டுரை மற்றும் சொந்தமான படைப்புகளில் ஈடுபட வேண்டும்.

* படம் அடிப்படையாக கொண்டு உரையாடல், சுருக்கவுரை, கதை உருவாக்குதல் போன்றவற்றில் ஈடுபட வேண்டும்.

* கருத்து மற்றும் தாளத்துடன் கவிதைகள் எழுதவும், வாசிக்கவும் திறனடைய வேண்டும்.

## முன்னேற்பாடுகள்

* முன்னறிதல் சோதனை நடத்துதல். அனைத்து நிலைகளிலும் உள்ள மாணவர்களை அடையாளம் காணுதல்.

* மாணவர்களின் தற்போதைய நிலை, திறன்கள், குறைகள்

போன்றவை **CPTA** மூலம் மாதந்தோறும் மதிப்பீடு செய்து அவர்களுக்கு தேவையான ஆதரவு வழங்குதல்.

## செயல்பாடுகள்

### ஜூன்

* படம் மற்றும் சொற்கள் கொண்ட பட அட்டைகள் வழங்குதல்.
* உரையாடலுக்கான வாய்ப்பு வகுப்பறையில் உருவாக்குதல்.
* வாசிப்புக் கருவிகள் தயாரித்தல்.
* வாசிப்பு மற்றும் எழுதுதலை மேம்படுத்தும் உத்திகள் உருவாக்குதல் .

### ஜூலை

* மொழி கற்றலுக்கான ICT வாய்ப்புகள் உருவாக்குதல்.
* வினை கொண்டாட்டங்களுடன் தொடர்புடைய வாசிப்பு மற்றும் எழுத்து பயிற்சிகள்.
* பள்ளி நூலகம் மற்றும் வகுப்பு நூலகம் செயல்படுத்தல்.

### ஆகஸ்ட்

* வகுப்பு நூலகத்தை சீராக பயன்படுத்துதல்.
* பெற்றோர்களின் ஆதரவை உறுதி செய்தல்.
* வீட்டு நூலகம் அமைத்தல்.
* பட விளக்கம்

* வாசிப்பில் திறன் பெற்று எழுத்து செயல்பாடுகளில் ஈடுபடுதல்.

**செப்டம்பர்**

* படித்த கதையை படமாக மாற்றுதல்.

* கதையிலிருந்து உரையாடல் தயாரித்தல்.

* கதையிலிருந்து கேள்விகள் உருவாக்குதல்.

* கதையின் காட்சிகளை நாடகமாக நடித்துக் காண்பித்தல்.

**அக்டோபர்**

* கேட்டதும் வாசித்ததுமான கதைகள் மற்றும் உரையாடல்களை சொந்த மொழியில் கூறுதல்.

* வெவ்வேறு வகையான பதிப்புகளை உருவாக்கும் பயிற்சிகள்.

**நவம்பர்**

* மாணவர்களுக்கு சுயமாக படைப்பாற்றல் செயல்களில் ஈடுபடும் வாய்ப்பு .

**டிசம்பர்**

* பல்வேறு மொழி பயிற்சிகள்

* எழுத்துப் பயிற்சி மூலம் தனிப்பட்ட சிறு குறிப்பு எழுதும் வாய்ப்பளித்தல்.

**ஜனவரி**

* பாடல் வரிகளை இணைத்து பாடுவதற்கும் எழுதுவதற்குமான வாய்ப்பளித்தல். (பாடலை முழுமைப்படுத்துதல்)

* சிறுகுறிப்புகள் மற்றும் சிறப்பம்சங்கள்

**பிப்ரவரி**

* எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் வாய்ப்பளித்தல்.
* அனைத்து மொழித்திறன்களையும் மாணவர்கள் அடைந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்துதல்.

* மாணவர்கள் சுயமாக படைப்பாற்றலில் ஈடுபடும் வாய்ப்பளித்தல்.

**மார்ச்**

* தனிப்பட்ட படைப்புகளை தயாரிக்க ஊக்குவித்தல்.

* சிறுகுறிப்புகள் அடங்கிய ஒரு படைப்பை தயாரித்தல்.

* ஒவ்வொரு மாணவர்களும் தனிப்பட்ட பதிப்புகள், சிறுகுறிப்புகள் .

* வீட்டில் வாசிப்பு, குழு வாசிப்பு, ஊர் வாசிப்பு, அம்மா வாசிப்பு, பட வாசிப்பு போன்றவற்றை ஊக்குவித்தல்.

* வகுப்பு நூலகம் மற்றும் பள்ளி நூலகத்தை உறுதிப்படுத்துதல்.

# ENGLISH

## Aims

* To speak, Read, & write English without any mistakes.
* To develop listening skills & reading skills

## ACTIVITIES

***Listening skills***

* Games

* Action songs

* Hello English activities

***Conversations***

* skit

* stories

Use ICT

## *Speaking skills*

* Descriptions
* Growing sentences
* Picture reading
* Picture description
* Self introduction
* Assembly activities
* Speech
* Book review
* Quiz riddles
* School radio

## *Reading skills*

* News paper reading
* Library books reading
* Book review
* Reading breaking news
* Find words
* Collect and read past tense
* Rhyming words
* Describing words
* Textbook activities

***Writing skills***

* Make word web
* Picture description
* Word chain sentence chain
* Make words,& sentences
* Make riddles
* Conversations
* Add more lines
* Develop story
* Description
* Notice proclamation
* Diary
* Letter Announcement
* Magazines

# கணிதம்

## செயல்பாட்டு நோக்கங்கள்

* இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு 100 வரை எண்ணறிவு, எண்களைப் புரிந்து கொள்ளுதல், கூட்டல், கழித்தல், பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல் போன்ற திறன்கள் பெறுதல்.

* அனைத்து மாணவர்களும் எண்ணறிவும் கணிதச் செயல்பாடுகளுக்குதீர்வு காணும் திறனும் பெறுதல்.

*கணிதக் கருவிகளைப் பயன்படுத்தி கணிதக் கருத்துகளை உறுதி செய்தல்.

* ஒரு குறிப்பிட்ட எண்ணிலிருந்து ஒழுங்காக எண்ணவும் எழுதவும் செய்தல். (100 வரை)

* ஒரு எண்ணுடன் வேறு எண்ணைக் கூட்டினால் பல்வேறு எண்கள் கிடைக்கும் என்பதைப் புரிய வைத்தல்.

* நடைமுறை பிரச்சினைக்கு தீர்வு காணுதல்.

## முன்னேற்பாடுகள்

* அடிப்படை கணிதக் கருத்துகளை குழந்தைகள் அடைந்துள்ளனரா என்பதை கண்டறியும் செயல்பாடுகள்.

* நடைமுறை பிரச்சனைகளுக்கு தீர்வு காண்கின்றனர்.

## செயல்பாடுகள்

### ஜூன்

* 1, 2, 3, 4 ...
1, 3, 5, 7 ...
10, 20, 30 ...
5, 10, 15 ...
2, 4, 6 ... போன்ற எண் வரிசைகளை பூர்த்தி செய்யும் திறன்.

* ஒரு எண்ணுடன் 1 ஐக் கூட்டினால் அடுத்த எண்ணும் 1 ஐக் குறைத்தால் முந்தைய எண்ணும் கிடைக்கும் என்பதை புரியவைத்தல்.

## ஜூலை

* ஒரு  தொகுப்பு பொருட்களை அதேபோன்ற மற்றொரு தொகுப்பை சேர்த்து எண்ணி மொத்த எண்ணிக்கை கூறுதல்.

* கணிதக் கருவிகள் அனைத்து மாணவர்களுக்கும் உறுதி செய்தல்.

* பத்து மற்றும் ஒன்றுகளின் கூட்டங்களைச் சேர்த்து இரு இலக்க எண்கள் உருவாக்குதல்.
(எடுத்துக்காட்டு: 5+5 = 10, 10+10 = 20)

## ஆகஸ்ட்

* பல்வேறு மாதிரிகளை உருவாக்குதல்.

* எண்களின் சிறப்புக்களை கண்டறிதல்.

. 99 உடன் 1 கூட்டினால் 100
. 10 பத்துகள் சேர்ந்தால் 100 கிடைக்கும்.
. 100 ஒன்றுகள் சேர்ந்தால் 100 ஆகும்.

* ஒவ்வொரு எண்ணையும் நடைமுறை பிரச்சனைகளுடன் இணைக்கும் செயல்பாடுகளைக் கண்டுபிடித்தல்.

## செப்டம்பர்

* கணிதக் கருவிகளைப் பயன்படுத்தி பிரச்சனைக்கு தீர்வு காணுதல்.

* விலைப்பட்டியல் உருவாக்குதல்.

* வகுப்பில் ஒரு கடை – பள்ளியில் ஒரு கடை: கணிதக் கருத்துகளை நடைமுறையில் உறுதிப்படுத்துதல்.

**அக்டோபர்**

*இரண்டு இலக்க எண்களின் நடைமுறை செயல்பாடுகளை அமைத்தல்.

* கூட்டல் மற்றும் கழித்தல் நடைமுறைப் பிரச்சனைகளை தீர்வு காணுதல்.

* எண் வரிசைகளை உருவாக்குதல். (ஒவ்வொரு எண் வரிசைக்கும் இடையிலான உறவை புரியவைத்தல்)
5, 10, 15, 20, 25....... (5 வீதம் கூட்ட வேண்டும்)

**நவம்பர்**

* இடமதிப்பைக் கண்டறிதல் (ஒன்று, பத்து).

* நடைமுறை பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக விளையாட்டு ரூபாய் நோட்டுகள் / காகிதத்தை வெட்டி உருவாக்கிய எண்கள், நாணயங்கள்

* "வகுப்பில் ஒரு " விளையாட்டு மூலமாக பிரச்சனைகள் உருவாக்குதல்.

* ரூபாய் நோட்டுகள், நாணயங்கள் அடையாளம் காண்தல். அவற்றை சேர்த்து எண்களை உருவாக்குதல்.
(10 ரூபாய் + 5 ரூபாய் = 15 ரூபாய்)

**டிசம்பர்**

* எண்ணறிவு உறுதி செய்தல்.

* இடமதிப்பை புரியவைக்கும் கருவிகள் தயாரித்தல். (இடமதிப்பு அட்டவணை, அபாக்கஸ்).

* இரண்டு இலக்க எண்களின் தொகை காண பல்வேறு முறைகளை கையாளுதல்.

**ஜனவரி**

* விலை விவரப்பட்டியல் உருவாக்குதல், விவரங்களை பட்டியலிடுதல், பிரச்சனைக்கு தீர்வு காண்தல்.

* பிரச்சனையை ஆராய்ந்து தொகை காண்பதற்கான வழிகளை கண்டுபிடித்தல்.

* கூட்டல் மற்றும் கழித்தல் செயல்பாடுகளை அமைத்தல்.

**பிப்ரவரி**

* இடைவேளைகளில் கணிதப் பாட்டு பாடுதல்.

* உல்லாச கணிதம் கருவிகளைப் பயன்படுத்தி பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்.

* கணிதக் கற்றலில் விளையாட்டுமுறைகளை கடைப்பிடித்து வெற்றியடையச் செய்தல்.

**மார்ச்**

* நாட்காட்டி உருவாக்குதல்.

* நாட்காட்டியில் சிவப்பு மற்றும் கருப்பு எண்களை

வேறுபடுத்தி புரிந்து கொள்ளுதல்.

* நாட்காட்டியின் அடிப்படையில் என் வரிசைகளை உருவாக்குதல்.

* நாட்காட்டியை வைத்து எண்களை ஒப்பிடுதல்.

* கணிதக் கருத்துகளை நடைமுறை பிரச்சனைகள் மூலம் கையாளும் திறனை வளர்த்தல்.

# CLASS 3
# தமிழ்

## இலக்குகள்

* கற்றலின் இலக்குகளை முன்னிலைப்படுத்தி அனைத்து மாணவர்களது மொழி அறிவையும் திறம்பட செய்தல்.

* பாடல்கள், கவிதைகள் ஆகியவற்றை கருத்து தெளிவுடனும், தாளமுடனும் சொல்லுதல்.

* கதை, கவிதை, நாட்டுப் புற பாடல்கள், புதிர்கள், பழமொழிகள் ஆகியவற்றை மனப்பாடம் செய்து புதிய சூழ்நிலைகளில் சரியாகப் பயன்படுத்துதல்.

* திறமையுள்ள மாணவர்களுக்கு தங்களது திறமைகளை வெளிப்படுத்த வேண்டிய மேடைகள் ஏற்படுத்தல்.
படைப்பாற்றலுடன் எழுதியதை வாசிக்கத் தூண்டுதல்.

* வாசிப்புப் பழக்கமும் எழுத்துத்திறனும் வளர்த்திட பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்துதல்.

* சுயமாக படைப்புகளை உருவாக்க ஊக்கப்படுத்துதல்.

* கதைகள் மற்றும் கவிதைகளை நாடகம், பொம்மை நாடகம், தனியாள் நடிப்பு போன்ற வடிவங்களில் வெளிப்படுத்துதல்.

* மொழிக்கற்றனை மேம்படுத்த தகவல் தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்துதல்.

## செயல்பாடுகள்

### ஜூன்

### 1. நானின்றி நீயில்லை

* கவிதையை ராகத்துடன் பாடுவதோடு பிரித்த வரிகளை கண்டுபிடித்தல்.

* முதல் எழுத்து ஒரே போன்று வரும் சொற்களையும் இரண்டாம் எழுத்து ஒரே போன்று வரும் சொற்களையும் கண்டுபிடித்தல்.

* பாடப்பகுதியை வாசித்து கதையாக கூறுதல்.

* பாடலை வாசித்து கருத்துகளை கூறுதல்.

* கவிதை வாசித்து கதையாக சொல்லுதல்.

* படங்களுக்கு பொருத்தமான வாக்கியங்களை எழுதுதல்.

* பாடப்பகுதியை வாசித்த புரிந்து கொண்ட நாடகமாக நடித்தல்.

* இயற்கை சீற்றங்களை பற்றி கலந்துரையாடுதல்.
* மொழிச் செயல்பாடுகளில் ஈடுபடுதல்.
* மரங்களை நட்டு வளர்த்தல்.

**ஜூலை**

**ஊசியின்றி உயிர் வாழ்வோம்**

* பழமொழிகளை திரட்டுதல்.

* தானியங்களை பற்றியும் அவற்றின் நன்மைகளைப் பற்றியும் அறிதல்.

* சத்தான உணவு வகைகளையும் துரித உணவு வகைகளையும் புரிந்து கொள்ளுதல்.

* கடிதம் எழுத அறிதல்.

* திருக்குறள் பற்றி அறிதல்.

* ஆரோக்கியமான உணவு பழக்கவழக்கங்களை அறிந்து கொள்ளுதல்.

* உடற்பயிற்சியின் நன்மைகளை அறிதல்.

* செய்தித்தாள் வாசித்தல்.

* தனிப்பட்ட மற்றும் குழுக் கற்றல் அனுபவங்கள் ஏற்படுத்துதல்.

* பள்ளி பத்திரிகை தயாரித்தல்.

**ஆகஸ்ட்**

**ஆடுவோம் ! பாடுவோம் !**

* பொங்கல் பற்றி குறிப்பு எழுதுதல்.

* விவசாயப் பாடல்களைத் திரட்டுதல்.

* சமையல் குறிப்பு எழுதுதல்.

* கதை வாசித்து அதில் வரும் கதாபாத்திரங்களைப் பற்றி எழுதுதல்.

* வாழ்த்து அட்டை தயார் செய்தல்.

* பல்வேறு விழாக்கள் பற்றி அறிந்து கொள்ளுதல்.

* திருவோணம் பற்றி அறிதல்.

* சொற்களின் முதல் எழுத்துக்களை மாற்றி புதிய சொற்களை உருவாக்குதல்.

* விழாக்களின் போது நடத்தப்படும் விளையாட்டுகள் பற்றி அறிதல்.

* இரண்டு சொற்களை ஒரு சொல்லாகவும் இரண்டு வாக்கியங்களை ஒரு வாக்கியமாகவும் எழுத அறிதல்.

* பல சொற்களுக்கு ஒரு பொருள் உண்டு என அறிதல். தீபாவளி பற்றி அறிதல்.

* நிறுத்த குறியீடுகளை பயன்படுத்த அறிதல்.

## செப்டம்பர்

## காலத்தின் அருமை

* மழை அனுபவங்களை எழுதுதல்.

* மழையின் நன்மைகளை அறிதல்.

* காலநிலைகளை பற்றி அறிதல்.

* காலநிலை மற்றும் இயற்கை சீற்றங்களுக்கும் பிராணிகளுக்கும் இடையே உள்ள தொடர்பை அறிதல்.

* தமிழ் மாதங்களின் பெயர்களை அறிதல்.

* உணவுப் பயிர்கள் பயிரிடப்படும் காலங்கள் பற்றி அறிதல்.

* உழைப்பின் அருமையை அறிதல்.

* சேமித்தல் பற்றி அறிதல்.

* டெங்கு காய்ச்சல் பற்றியும் நோய்கள் பரவுவதற்கான காரணங்கள் பற்றியும் அறிதல்.

* குளிர்கால அனுபவங்கள் எழுதுதல்.

* குளிர்காலத்தில் ஏற்படும் பிரச்சனைகள் பற்றி அறிதல்.

* குளிர்காலத்தில் உட்கள்ள வேண்டிய உணவுகளையும் தவிர்க்க வேண்டிய உணவுகளையும் பட்டியலிடுதல்.

* ஓரெழுத்து சொற்களை கண்டறிதல்.

**அக்டோபர்**
**காக்க... காக்க...**

* செல்லப் பிராணிகளை பராமரிக்க வேண்டும் என்னும் கலந்துரையாடலில் ஈடுபடுதல்.

* விலங்குகளின் தனித்தன்மைகளை கண்டுபிடித்து எழுதுதல்.

* ஒன்றும் பலவும் - சொற்களை எழுதுதல்.
எடுத்துக்காட்டு : பசு - பசுக்கள், சிறுத்தை - சிறுத்தைகள்

* கதையை வாசித்து அதில் உள்ள நீதியை கூறுதல்.

* விலங்குகளை துன்புறுத்துவது தவறு என்று அறிந்து கொள்ளுதல்.

* சேராத சொற்களை கண்டறிந்து வட்டமிடுதல்.

* விடுகதைகளை சேகரித்தல்.

* புதிய விடுகதைகள் சுயமாக உருவாக்குதல்.பதிப்பாக வெளியிடுதல்.

* காடு பற்றிய காட்டு விலங்குகள்பற்றியும் அறிதல்.

* காட்டு விலங்குகளின் நிலைமை பற்றி குறிப்பபு எழுதுதல்.

* வீட்டில் வளர்க்கும் உயிரினங்களையும் அவற்றின் உணவு வகைகளையும் பட்டியலிடுதல்.

* செல்லப் பிராணிகளின் பராமரிப்பு பற்றி எழுதுதல்.

**நவம்பர், டிசம்பர்**

**பழமையும் புதுமையும்**

* பண்டைய கால, தற்கால சாலை வசதிகளை பட்டியலிடுதல்.

* சொற்களில் உள்ள பிழைகளை கண்டறிதல்.

* வாக்கியத்தை ஒழுங்குபடுத்தி எழுத அறிதல்.

* விண்ணப்பம் எழுத அறிதல்.

* பண்டைய கால வாகனங்கள்,தற்கால வாகனங்கள் எனப் பிரித்து பட்டியலிடுதல்.

* சக்கரம் கடை கண்டுபிடிக்காவிட்டால் - நமது நிலைமை பற்றி கற்பனையாக எழுதுதல்.

* இரயில் போக்குவரத்து பற்றியும் அதன் வளர்ச்சியை பற்றியும் அறிதல்.

* இரயிலின் பயன்களை குறிப்பாக எழுதுதல்.

* ரயில் கண்டுபிடித்த ஜார்ஜ் ஸ்டீவன்சன் அவர்களது வாழ்க்கை வரலாறு அறிதல்.

* வினா வாக்கியங்களை முறையாக பயன்படுத்துதல்.

* கல்வி கற்கும் வீட்டு சூழலையும் பள்ளி சூழலையும் வேறுபடுத்தி கூறுதல்.

* கல்வி கற்பதன் முக்கியத்துவத்தை அறிதல்.

* பள்ளிக்கூடத்தை பற்றிய வாக்கியங்கள் எழுதுதல்.

* மொழிச் செயல்பாடுகளை சுயமாக செய்தல்.

**ஜனவரி**

**தொழிலும் வாழ்வும்**

* பல்வேறு தொழில்களையும் தொழில் செய்பவர்களின் பெயர்களையும் பட்டியலிடுதல்.

* வாக்கியங்களை வரிசைப்படுத்தி எழுதுதல்.

* பனைமரம் மற்றும் தென்னை மரம் பற்றி குறிப்பு எழுதுதல்.

* ஓர் மற்றும் ஒரு வேறுபாட்டை அறிதல். சரியாக பயன்படுத்துதல். எடுத்துக்காட்டு : ஓர் ஊர், ஓர் அணில் ஒரு மரம், ஒரு கிளி

* சொற்களை பயன்படுத்தி சுயமாக வாக்கியம் அமைத்தல்.

* வளரும் வாக்கியங்கள் எழுதுதல்.

* தேங்காய் சிரட்டை பயன்படுத்தி பொருட்கள் தயாரித்தல்.

* தொழில் தொடர்பான பலன்களை திரட்டி தொகுப்பு உருவாக்குதல்.

* நெசவுத் தொழில் பற்றி அறிதல்.

* பாடப்பகுதியை உரையாடல் வடிவில் எழுதுதல்.

* பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கு சொற்களாக மாற்றி எழுதுதல்.

**பிப்ரவரி, மார்ச்**

**அறிவின் திறவுகோல்**

* வானொலி பற்றி குறிப்பு எழுதுதல்.

* பிழை திருத்த அறிதல்.

* ஐ, ஆல், கு எழுத்துக்களை தகுந்த இடங்களில் இணைத்த சொற்றொடர்களை நிறைவு செய்தல்.

* தொலைக்காட்சியை பற்றி அறிந்து அதன் நன்மை தீமைகளை பட்டியலிடுதல்.

* கைபேசியை பற்றி அறிதல்.

* கைபேசியின் வசதிகளை பட்டியலிடுதல்.

* வானொலி, தொலைக்காட்சி, கைப்பேசி இவற்றின் நன்மை தீமைகளை வரிசைப்படுத்துதல்.

* பாடப்பகுதியை நாடகமாக நடித்தல்.

* மொழிச்செயல்பாடுகளை சுயமாக செய்தல்.

# சூழ்நிலையியல்

## இலக்குகள்

* மாணவர்களிடையே இயற்கை மற்றும் சுற்றுப்புறத்தின் மீதுள்ள அன்பையும் பொறுப்பையும் வளர்த்தல்.

* சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக உற்று நோக்கல் மற்றும் ஆராய்தல் திறன்களை மாணவர்களிடையே ஊக்குவித்தல்.

* பல்வேறு உயிரினங்களையும் அவற்றை பாதுகாப்பதற்கான சிந்தனைகளையும் வளர்த்தல்.

* ஆரோக்கியமான வாழ்க்கை முறை, சுகாதாரம், சரியான உணவுப் பழக்கவழக்கங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

* சமூகப் பொறுப்புகள், சாலை பாதுகாப்பு, முதலுதவிகள் போன்றவற்றில் விழிப்புணர்வை வளர்த்தல்.

* அறிவியல் திறனை மேம்படுத்த சோதனைகள் களப்பயணங்கள், மாதிரிகள், அட்டைகள், ஐசிடி கருவிகள் போன்றவற்றை பயன்படுத்துதல்.

* பாடத்திட்டத்துடன் இணைத்த அனுபவம் சார்ந்த கற்றல் முறைகள் மூலம் சுய சிந்தனையும் குழு செயல்பாடுகளையும் ஊக்குவித்தல்.

## ஜூன் – ஜூலை

* சுற்றுப்புற தினத்தையொட்டி மரக்கன்று நடுதல். மற்றும் இயற்கை நடத்தல்

* சுற்றுப்புறத்திலுள்ள உயிரினங்களைப் பார்வையிடுதல் மற்றும் அதன் சிறப்பம்சங்களைப் புரிந்து கொள்தல்.

* பலவகையான வாழ்விடங்களை பார்வையிட - களப்பயணம்

* இயற்கைக்கு ஆபத்தாக விளையும் மனிதச் செயல்களைப் பற்றிய ஆவணப்படம் காட்சி

## ஜூலை – ஆகஸ்ட்

* உயிரியல் பண்பாட்டு பூங்கா .

* பட்டாம்பூச்சி பூங்கா பராமரித்தல்.

* பள்ளியின் காய்கறித் தோட்ட பராமரிப்பு

* வீட்டில் பூந்தோட்டம் மற்றும் காய்கறித் தோட்டம் அமைத்தல்.

## செப்டம்பர் – அக்டோபர்

* சுகாதார அட்டை தயார் செய்தல்

* உணவுப் பழக்கவழக்கங்கள், ஆரோக்கியப் பழக்கங்கள் – ஆவணப்படம் காட்சி

**நவம்பர் – டிசம்பர்**

* காலநிலையும் ஆடைகளும் – பள்ளி நூலகம், ஐசிடி பயன்பாட்டுடன் விவாதம்

* பலவகையான ஆடைகள் – ஆல்பம் தயாரித்தல்

* சாலை விதிகள் – கலந்துரையாடல்

* போக்குவரத்து விளக்க காட்சி – மாதிரி தயாரித்தல்

* முதலுதவி பெட்டி உருவாக்குதல்.

**ஜனவரி – மார்ச்**

* இரவு நேர ஆகாயத்தை உற்று நோக்குதல்.

* இரவும் பகலும் – சோதனை

* உலக உருண்டை (குளோப்) பார்வையிடுதல்.

* இந்தியா – தேசியச் சின்னங்கள்

* கேரள – அடிப்படை தகவல்கள், வரைபடம் பார்வையிடுதல்

* கேரளத்தின் புவியியல் அமைப்புகள் – ஆவணப்படக் காட்சி

* பலவகை வாழ்விடங்கள் – ஐசிடி மூலம் கற்றல்

* உயிரினங்களுடைய கூடுகளின் சேகரிப்பு

# கணிதம்

## இலக்குகள்

 * கணிதம் அன்றாட வாழ்வுடன் தொடர்பு கொண்டுள்ளது என்ற உணர்வை வளர்த்துதல்.

 * ஜியோமிக்ரிக் வடிவங்களை கண்டறிதல் மற்றும் வரைதல் திறனை மேம்படுத்தல்.

 * படம் வரைதல், வண்ணம் பூசுதல், வடிவங்கள் உருவாக்குதல் போன்ற செயல்கள் மூலம் கணித கற்றலை ரசனைப்படுத்துதல்.

 * தற்க சிந்தனை பிரச்சனைக்கு தீர்வு காணும் திறன் மற்றும் கருத்துக்களை புரிந்து கொள்ளும் திறன்களை வளர்த்துதல்.

 * ஓரிலக்கம் முதல் மூன்று இலக்கம் வரையுள்ள எண்களை சொல்லவும் எழுதவும் பயிற்சியளித்தல்.

 * நாணயங்கள் மட்டும் நோட்டுக்களை பயன்படுத்தும் செயல்பாடுகள் வாயிலாக பொருளாதார விழிப்புணர்வை வளர்த்துதல்.

 * நேரத்தின் நடைமுறை பயன்பாட்டை அறிவதற்கான அனுபவங்களை உருவாக்குதல்.

 * நீளத்தின் அலகுகளை (சென்டிமீட்டர், மீட்டர்) அறிமுகப்படுத்துதல். நீளத்தை ஊகித்து கூறவும்

துல்லியமாக அளப்பதற்கான திறனையும் .

* ஒரே எண்ணின் தொடர்ச்சியான கூட்டலே பெருக்கல் எனப்புரிந்து கொண்டு செயல்பாட்டைச் செய்தல்.

* ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்கள் தொடர்பான பெருக்கல் பண்புகளை புரிந்து கொள்ளுதல்.

* கணிதத்தை மகிழ்ச்சிகரமாகவும் குழந்தைகளின் அனுபவங்களுடன் தொடர்புபடுத்தியும் கற்றல்.

## செயல்பாடுகள்

### ஜூன் – ஜூலை

* ஜாமெட்ரிக் வடிவங்களை அடையாளம் காணுதல்.

* சதுரம், வட்டம், முக்கோணம் போன்ற வடிவங்களைப் புரிந்து கொண்டு புதிய மாதிரிகள் உருவாக்குதல்.

* காய்கறி அச்சுப் பதிப்பு (Vegetable Printing)

### ஜூலை – ஆகஸ்ட்

* ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாக கணிதப்பைகள் (Math Kit) .

* விளையாட்டு நோட்டுகள் தயாரித்தல்.

* அபாகஸ் (Abacus) தயாரித்தல்.

**ஆகஸ்ட் – செப்டம்பர்**

* நடைமுறை பிரச்சனைகளுக்குத் தீர்வு காண கணித செயல்பாடுகளைப் பயன்படுத்துதல்.

**அக்டோபர்**

* மீட்டர் அளவுகோல் தயாரித்தல்

* மாணவர்களின் உயரம், எடை, அளவை பரிசோதித்தல்

**நவம்பர் – டிசம்பர்**

* பெருக்கல் அட்டைகள் தயாரித்தல்.

**ஜனவரி – பிப்ரவரி**

* கடிகாரம் தயாரித்தல்.

* நாட்காட்டி - நடைமுறைப் பிரச்சனைகளைகளுக்கு தீர்வு காணுதல்.

**மார்ச்**

* அளவ பாத்திரங்கள் தயாரித்தல். நடைமுறைப் பிரச்சனைகளைகளுக்கு தீர்வு காணுதல்.

# English

## Aim

* Enable students to speak, read, and write English fluently and accurately through age-appropriate activities and real-life situations.

* To build confidence in speaking English – Encouragestudents to express thoughts, feelings, and ideas confidently in public settings like school assemblies, class discussions, and school radio.

* To enhance listening comprehension – Improve students' ability to listen, understand, and respond through interactive activities, audio materials, stories, and ICT tools.

* Expand students' vocabulary by identifying and using naming words, action words, describing words, and correct sentence structures in both oral and written form.

* Promote regular reading through newspapers, library books, and textbooks to develop comprehension, imagination, and critical thinking.

* To encourage creative writing – Support students in writing stories, riddles, descriptions, letters, diaries, and notices, thereby nurturing their imagination and clarity of expression.

* To integrate English learning with everyday life – Connect classroom learning with real-life contexts like reading notices, writing announcements, or creating classroom post offices.

* To use technology in learning – Integrate ICT tools to make listening, reading, and speaking more engaging and effective.

## ACTIVITIES

### June – July

Developing Listening and Speaking Skills

### *Listening Skills*

* Participate in interactive language games, action songs, and Hello English activities.

* Listen to and enact conversations, short skits, and storytelling sessions.

* Use ICT tools (audio stories, animated clips, apps) to enhance auditory learning.

### *Speaking Skills*

* Identify naming words (nouns) from a picture.

* Identify action words (verbs) from the same picture.

* Make simple sentences using both nouns and verbs related to the picture.

* Create symbol-based picture descriptions.

* Practice growing sentences, picture reading, and self-introductions.

* Share during school assemblies to build confidence.

***August – September***

***Focus: Enhancing Creative Expression in Writing, Reading Skills***

***Reading Skills***

* Read newspapers, library books, and breaking news headlines.
* Identify and collect new vocabulary words.
*Explore and read past tense verbs in stories.
* Identify and enjoy rhyming words in poems.
* Use descriptive words (adjectives) to add details.
* Participate in textbook-based reading comprehension activities.

***Writing Skills***

* Create word webs based on themes or pictures.
* Write picture descriptions using adjectives.
* Build word chains and sentence chains.
* Construct short sentences and riddles.
* Frame simple conversations.
* Extend ideas by adding lines to short paragraphs.

***October – November***

***Focus: Expressing Thoughts and Emotions in Language***

* Continue reading newspapers and library books.
* Practice reading dialogues, skits, and short stories.
* Use ICT materials for enhanced reading experiences.
* Read and create stories from prompts.
* Understand and read notices and announcements.
* Write descriptive passages based on images or personal experiences.
* Express thoughts, wishes, and opinions in writing.

***December – January***

***Focus: Creative Speaking and Writing; Expressing Personal Feelings***

* Read newspapers, library books, and book reviews.
* Engage in story-based conversations and dramatizations.
* Use ICT resources for audio-visual story engagement.
* Read and develop stories from visuals.
* Read diaries and personal letters.
* Write personal diaries.

***February – March***

***Focus: Improving Presentation and Communication Skills***

* Read news, books, poems, stories, diaries, and letters.
* Continue ICT-based reading practices.
* Read and present self-created stories or creative passages.

* Maintain a personal diary.
* Frame announcements and notices.
* Describe events or visuals in detail.
* Express personal thoughts, opinions, and reflections.

***Suggested Activities***

* Speeches
* Book reviews
* Quizzes
* Riddles
* School radio contributions
* Description writing
* Self-introduction presentations
* Participation in school radio programs

---

# CLASS 4
# தமிழ்

## நோக்கங்கள்

* மாணவர்களின் எழுதும் திறனை மேம்படுத்துதல்.

* வாசிக்கும் திறனை ஊக்குவித்தல்.

* மொழி எழுத்தில் திறமையையும் நம்பிக்கையையும் வளர்த்தல்.

* மொழி வளர்ச்சியில் அனைத்து குழந்தைகளின் பங்களிப்பு.

* வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்துதல்.

* மொழி வளர்ச்சியில் அனைத்து குழந்தைகளும் பங்கேற்பதை உறுதி செய்தல்.

* மொழியில் பின்தங்கிய குழந்தைகளை கண்டறிந்து, தனிப்பட்ட பயிற்சி கொடுத்தல்.

## செயல்பாடுகள்

### செயல்பாடு - 1

* ஆரம்பப்பாடங்களை கற்பிப்பதன் மூலம் பின்தங்கிய குழந்தைகளை கண்டறிதல்.

* கண்டறியப்பட்ட குழந்தைகளுக்கு ஒரு மாத காலம் தனிப்பட்ட பயிற்சி அளித்தல்.

* குழுக்களாக செயல்படும் வாய்ப்புகளை மாணவர்களுக்கு வழங்கல். – குழு ஆராய்ச்சி, படிப்பு மற்றும் உரையாடல் செயல்கள்

### செயல்பாடு - 2

* மாணவர்கள புத்தகங்களை வாசிக்க ஊக்குவித்தல். குறிப்புக்கள் எழுதுதல்.

* வாசித்தவற்றைப் பதிவு செய்ய குறிப்புகள் எழுத ◌

பயிற்சி அளித்தல்.

* பள்ளி காலைக்கூட்டம் மற்றும் வாசிப்பு தினங்களில் மாணவர்கள் பங்கேற்கச் செய்வது

* மாணவரின் எழுத்துத் திறனை மேம்படுத்த தனி கவனம் செலுத்துதல்.

**செயல்பாடு - 3**

* கதைகள், கவிதைகள், கட்டுரைகள் எழுதும் மற்றும் வாசிக்கும் பயிற்சி அளித்தல்.

* மாதத்தில் ஒருமுறை எழுத்துப் பட்டறை ஏற்பாடு செய்தல்.

தினசரி செயல்பாடுகளில் சிறிய குறிப்புகள் எழுத வைத்தல்.

**செயல்பாடு** - 4

* பாடங்களுடன் தொடர்புடைய கதைகள், கவிதைகள் மற்றும் வீடியோக்கள் மாணவர்களுக்கு காண்பித்தல்.

* உரையாடல்கள், நடிப்புப் பயிற்சிகள் ஆகியவற்றின் வாயிலாக மொழிப் பயிற்சி

* மாணவர்களின் அனுபவங்களை கூறச் செய்தல். – சொல்வதற்கான நம்பிக்கையை உருவாக்குதல்.

## செயல்பாடு - 5

* தமிழ் கவிஞர்கள், எழுத்தாளர்கள் பற்றிய தகவல்கள், புகைப்படங்கள், படைப்புகள் ஆகியவற்றின் கண்காட்சி

* கலையின் மூலம் பாடங்களை கற்றல் – ஓவியம், நாடகம், கைவினை போன்றவற்றின் மூலம் மொழி வளர்ச்சி

* வகுப்பு மன்றங்களில் எழுத்துப் பட்டறைகள் நடத்துதல்

* படைப்பு விழா – குழந்தைகள் தங்கள் கவிதை, கதை, நாடகம், ஓவியம் போன்றவற்றை வெளியிட ஒரு மேடை வழங்குதல்.

## எதிர்பார்க்கப்படும் முடிவுகள்:

* கேட்டல், வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல் போன்ற மொழி திறன்களை வளர்த்தல்.

* மொழி கற்றலுக்கான நம்பிக்கையும் ஆர்வமும் வளர்க்கப்படும்.

* வாசிப்பின் முக்கியத்துவம் மாணவர்களுக்கு தெளிவாக புரியச் செய்யப்படும்.

* திறமை மிக்க மாணவர்களை கண்டறிந்து, அவர்களை மேலும் மேம்படுத்தும் வாய்ப்பு ஏற்படும்.

* மொழியை வாசிக்கும், எழுதும், பேசும் செயல்பாடுகளில் மாணவர்களின் முழுமையான பங்கேற்பும் உறுதி செய்யப்படும்.

# கணிதம்

## நோக்கங்கள்

* கணிதத்தை எளிமையாகவும் அர்த்தமுள்ளதாகவும் மாற்றி மாணவர்களுக்கு எளிதாக்குதல்.

* விளையாட்டு மற்றும் படைப்புக்கள் மூலம் கணிதக் கற்றலை எளிமையாக்குதல்.

* வாழ்க்கை நிகழ்வுகளோடு கணிதத்தை இணைத்துக் கொண்டு, கணிதம் குறித்த பயத்தை தவிர்த்தல்

* மாணவர்கள் புரிந்து கொள்ள கணித கருத்துக்களை எளிமையாக்குதல்.

* கணிதத்தின் அடிப்படைச் செயல்பாடுகளை (கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்) விளக்கமான முறையில் கற்றல்.

* பொழுதுபோக்கு முறையில் பயிற்சி அளிப்பதற்கான வாய்ப்பு வழங்குதல்.

* விளையாட்டு வழி கற்றல் மூலம் திறன் மேம்படுத்தல்.

# செயல்பாடுகள்

## 1. விளையாட்டு வழி கற்றல்

* பாடத்தில் உள்ள கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற செயல்பாடுகளை எளிதாக புரிந்து கொள்ள எளிய விளையாட்டுகள் வழி கணிதத்தைத் கற்றல்

உதாரணம்: புள்ளிவிவர கட்டைகள், எண்கள் கார்டுகள், சீட்டுகள், சுழற்சி சக்கரம் போன்றவை

## 2. கணிதக் கிட் உருவாக்கம்:

* வகுப்பில் கணிதம் கற்க தேவையான விதைகள், பென்சில்கள் சேகரித்து மாணவர்களுக்கு கணக்கை எளிமைபடுத்துதல்.

* வகுப்பிற்குள் கணிதக் கருவிகள் உருவாக்குதல்.

* மாணவர்கள் இதனைப் பயன்படுத்தி தாங்களே கணக்குகள் செய்யும் வாய்ப்பு பெறுதல்.

## 3. கணிதக் கண்காட்சி:

* வடிவங்கள், நேரம், அளவீடுகள் ஆகியவைகளின் மாதிரிகள் – மாணவர்களால் உருவாக்கப்பட்ட மாதிரிகள்

* படங்கள் மற்றும் உருவ வடிவங்கள் கண்காட்சியில் காண்பித்தல்.

* மாணவர்கள் தாங்களாகவே மாதிரிகள், படங்கள், வடிவங்கள் உருவாக்க ஒரு கணித பட்டறையை ஏற்பாடு செய்தல்.

**4. படைப்பு வழி கற்றல்:**

* கணிதப் பாடல்கள், புதிர்கள், கதைகள் போன்ற படைப்பு செயல்கள் மூலம் கணிதத்தை கற்பித்தல்.

* மாணவர்கள் பதில்கள் சிந்திக்க, குழு பேச்சுகள் நடத்த வாய்ப்பு ஏற்படுத்துதல்.

* கணித பயத்தை போக்கும் வகையில் கற்றலின் ஆர்வத்தையும் பங்களிப்பையும் உருவாக்க செய்தல்.

* மாணவர்களின் படைப்புத் திறன்களை ஊக்குவிக்கும் வகையில் கணிதக் கருத்துக்களை தொகுத்து கற்பித்தல்.

## எதிர்பார்க்கப்படும் முடிவுகள்:

* மாணவர்கள் கணிதம் குறித்த பயத்தை குறைத்து, அதை ஒரு நண்பனாக உணர்வர்.

* அடிப்படை கணிதச் செயல்பாடுகளில் (கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்) நிபுணத்துவம் அடைய உதவப்படும்

* கற்றலின் மீது ஆர்வம், தனித்துவமான பங்கேற்பு, குழுப்பணியில் ஈடுபாடு ஆகியவை வளர்ச்சியடையும்.

* மாணவர்கள் தங்கள் படைப்பாற்றலைக் காண்பிக்கக்கூடிய வாய்ப்புகளைப் பெறுவர்.

* விளையாட்டு, கலை, கதை போன்ற பல்வேறு வழிகளில் கணிதம் எளிமையாய் கற்றுக்கொள்ளும் சூழல் உருவாகும்.

* வாழ்க்கைச் சூழ்நிலைகளுடன் இணைந்த செயல்பாடுகள் மூலம் பயிற்சி வலுப்படுத்தப்படும்.

# சூழ்நிலையியல்

## நோக்கங்கள்

* மாணவர்களுக்கு அவர்களின் சுற்றுப்புற சூழலை அறிமுகப்படுத்தி, அறிவியல் மனப்பான்மை மற்றும் கவனிக்கும் திறனை வளர்த்தல்.

* அறிவியல் சிந்தனையும், நடைமுறை அனுபவங்களின் வழியிலான கற்றலையும் ஊக்குவித்தல்.

* இயற்கையோடு தொடர்புடையதும், அனுபவ ரீதியாகவும் அறிவியல் கற்றலை அறிமுகப் படுத்துதல்.

* கவனத்துடனும், உற்சாகத்துடனும் கற்றலை ஊக்குவித்தல்.

* மாணவர்களில் அறிவியல் ஒழுங்கு, கருத்தாக்கம் மற்றும் ஆராயும் திறன்களை வளர்த்தல்.

* அறிவியல் சிந்தனையை வளர்த்தல்.

* உள்ளுணர்வு மற்றும் அறிவியல் மனப்பான்மை மற்றும் ஆர்வத்தை வளர்க்கும் அறிவியல் கண்ணோட்டத்தை ஊக்குவித்தல்.

## செயல்பாடுகள்

**1. அறிவியல் விழா:**

* ஆண்டுதோறும் அறிவியல் விழா ஏற்பாடு செய்தல்.

* மாணவர்கள் சிறிய அறிவியல் மாதிரிகள், பரிசோதனைகள், மற்றும் விளக்கப் படங்களைத் தயாரித்தல்.

* இந்தியா மற்றும் கேரள வரைபடங்களில் முக்கிய இடங்கள், மாநிலங்கள், நதிகள், மலைகள் போன்றவற்றை அடையாளப்படுத்துதல்.

* வளர்ந்த சமூக மற்றும் புவியியல் உணர்வு ஏற்படுத்துதல்.

**2. களப் பயணம்:**

* மாணவர்களை உள்ளூர் காய்கறி தோட்டங்கள், பண்ணைகள், சுகாதார மன்றங்கள், ஆறுகள்,

பூங்காக்கள் போன்றவற்றை பார்வையிடுதல்.

* இயற்கையை நேரில் காணும் வாய்ப்பு மூலம் அவர்கள் உணர்வுகளை மேம்படுத்தல்.

* பயணத்தின்போது காண்பதையும், கேட்பதையும் பதிவு செய்யும் பயிற்சி அளித்தல்.

* ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் செயல்திறனாக பயணம் மேற்கொள்ளல்.

**3. வானியல் வகுப்பு:**

* இரவில் நட்சத்திரங்கள், சந்திரன் மற்றும் கோள்களை பார்க்க கூடிய வானியல் பரிசோதனை வகுப்புகள் நடத்துதல்.

* பார்த்த தகவல்களை பதிவு செய்வதற்கான பயிற்சி அளித்தல்.

* மாணவர்களின் தன்னிச்சையான ஆராய்ச்சி திறனை வளர்த்தல்.

**4. அறிவியல் வினாடி வினா:**

* வகுப்பு அல்லது பள்ளி அளவில் அறிவியல் சார்ந்த வினாடி வினா போட்டிகள் நடத்துதல்.

* குழு சார்ந்த வினா-விடை உரையாடல்களால், மாணவர்களின் திறன் பகிர்வு திறனை மேம்படுத்தல்.

## 5. எளிய பரிசோதனைகள்:

* பள்ளி அசெம்பிளிகளில் மாணவர்கள் நடத்தக்கூடிய எளிய அறிவியல் பரிசோதனைகள் காண்பித்தல்.

* விளக்கக் குறிப்புகள் எழுதி பேசும் பயிற்சியுடன் அறிவியல் அறிவை விரிவுபடுத்துதல்.

## 6. அறிவியல் இதழ் வெளியீடு:

* மாணவர்கள் தயாரிக்கும் அறிவியல் கட்டுரைகள், சித்திரங்கள், ஆல்பங்கள், விளக்கங்கள் போன்றவற்றை தொகுத்து மாதாந்திர / காலாண்டு இதழாக வெளியிடுதல்.

* மாணவர்களின் சிறிய படைப்புக்கள், அறிவியல் ஆல்பம் போன்றவை இதழாக வெளியிடுதல்.

## எதிர்பார்க்கப்படும் முடிவுகள்:

* அறிவியல் சிந்தனை மற்றும் ஆராய்ச்சி மனப்பான்மை வளர்க்கப்படும்.

* செயல்பாடுகள் வழியாக அனுபவ ரீதியான கற்றல் உறுதி செய்யப்படும்

* மாணவர்கள் தங்கள் சுற்றுப்புறங்களை அறிவியல் கண்ணோட்டத்தில் அணுகத் தொடங்குவார்கள்.

# English

Duration: June to March

**Objectives**:

* To bring English into everyday use and develop functional language skills.

* To strengthen speaking, expression, and comprehension skills by connecting language with stories and emotions.

* To build writing fluency, self-expression, and daily usage of English.

* To create a public platform for students to showcase and build confidence in their English skills.

* To promote a love for reading, independent learning, and vocabulary building.

* To encourage creativity, ownership, and pride in English writing and expression.

* To provide a fun and competitive platform for developing English skills—speaking, listening, reading, and writing.

## 1. English in Daily Life

***Activity:***

* Encourage students to use simple English expressions and sentences in classroom and at home.

Teachers model classroom communication in English (e.g., "May I drink water?", "Please pass the book.")

Parents are guided to help children practice greetings, self-introductions, and polite conversation in English.

## 2. Presenting Discourses (Textbook-Based)

***Activity:***

* Prepare and present discourses like roleplays, skits, dialogues, storytelling, and conversations based on textbook lessons.
* Use costumes and props to make it interactive.

## 3. Diary Writing in English

***Activity:***

* Motivate students to maintain a simple English diary, writing one or two sentences daily.
* Prompts may be given: “What did you enjoy today?”, “What new word did you learn?”

## 4. English Assembly

***Activity:***

* Conduct monthly or fortnightly English assemblies.
* Include thoughts for the day, word of the day, English songs, skits, riddles, speeches, and book reviews.

## 5. English Corner

***Activity:***

* Set up an English reading corner in the classroom or library with storybooks, charts, word trees, and flashcards.
* Students write and present their reading reflections or reviews.

## 6. English Magazine

***Activity:***

* Compile student works like poems, short stories, riddles, essays, diary entries, and art with English captions.
* Publish as a class or school English magazine.

## 7. English Fest

***Activity:***

* Organize an English Fest with language-based activities:
. Elocution
. Spelling Bee
. Roleplay
. Drama
. English Song/Dance
. Quiz

# Expected Outcomes

* Improved confidence and fluency in spoken English

* Real-life use of English, promoting functional and meaningful learning

* Students begin to initiate conversations and respond confidently in simple English in both school and home environments.

* Ability to follow classroom instructions, understand spoken English in activities like stories, conversations, and roleplays.

* Students confidently speak on stage, participate in assemblies, and perform in skits and roleplays with clear pronunciation and correct expressions.

* Children start to create their own short stories, poems, and reflections, showing increased originality and understanding of sentence structure.

* Learners develop an interest in reading storybooks, newspapers, and magazine articles, and are able to summarize or express opinions about them.

* Activities like quizzes, riddles, and discussions encourage students to think, reason, and express opinions clearly.



**Presented by**

**GVLPS CHITTUR**
**Faculty Team**